# 6

# திறப்பதற்கு முன் சிந்தியுங்கள்!

## (மத்தேயு 5:33-37)

*நமது நாவுகளைக் காத்துக் கொள்ளுதலுக்கும், நாம் என்ன கூறுகிறோம் என்பதைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பதற்குமான புத்திமதிகள் வேதாகமத்தில் நிறைந்துள்ளன. நீதிமொழிகளின் புத்தகத்தில், "தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்" (13:3); "தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப்பார்க்கிலும் மூடனை நம்பலாம்" (29:20) என்று சாலொமோன் கூறினார். நாவின் வலிவார்ந்த அழிக்கும் திறனைப் பற்றி, யாக்கோபு பின்வரும் வரைவளவான விவரிப்பைக் கூறினார்:*

> *பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! (யாக்கோபு 3:5ஆ, 6).*

*முந்திய பாடம் ஒன்றில் நாம், "தன் சகோதரனை வீணனென்று* சொல்லுகிறவன் *ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று* சொல்லுகிறவன் *எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்று கற்றறிந்தோம் (மத்தேயு 5:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நமது தற்போதைய பாடத்திற்கான வேதவசனப் பகுதி, நமது வாய்களில் இருந்து வருகிற வார்த்தைகளின் மீது முழு கவனம் செலுத்துகிறது.*

*நமது பேச்சின்மீது வேதாகமம் இவ்வளவு அதிகமான வலியுறுத்தத்தை வைப்பது ஏன் என்று சிலர் வியப்படையலாம். யாரேனும் ஒருவர், "உலகத்தில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய அதி அவசரமான பிரச்சனைகள் நிறைய உள்ளன.* வார்த்தைகள் *போன்ற சிறு விஷயங்களைக் குறித்துக் கலந்துரையாடுவதில் காலத்தை வீணாகச் செலவிட வேண்டியது ஏன்?" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. நமது வாசகர்களில் பெரும்பான்மையானவர்கள், வார்த்தைகளை ஞானமாகப் பயன்படுத்துதல் இன்றி, முதன்மையான பிரச்சனைகள் சட்டப்படி ஒருக்காலும் தீர்த்து வைக்கப்பட இயலாது என்பதைப் புரிந்து கொள்கின்றனர். இருப்பினும் ஒரு கிறிஸ்தவருக்கு, எவ்வாறு பேசுவது என்பதன் மீதான கலந்துரையாடல் இருமடங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, ஏனெனில் அவரது பேச்சு, கர்த்தருக்கு அவரது ஒப்புக்கொடுத்தலைப் பிரதிபலிக்காவிட்டால், அவர் ஒருக்காலும் "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்துக்கு வெளிச்சமாக" இருக்க முடியாது (மத்தேயு 5:13, 14). இந்தப் பாடத்திற்கு நான், "திறப்பதற்கு முன் சிந்தியுங்கள்!" என்று தலைப்பிட்டுள்ளேன்,*

*அதாவது நீங்கள் உங்கள் வாயைத் திறப்பதற்கு முன்னர் யோசியுங்கள்.*

## வேதவசனப் பகுதி

***அவர்கள் கேள்விப்பட்டு இருந்தது என்ன***

*மத்தேயு 5:33-37 என்ற வேதவசனப்பகுதியை ஆராய்வதைக் கொண்டு நாம் நமது படிப்பைத் தொடங்குவோமாக. இவ்வசனங்கள், யூதர்கள் கேள்விப்பட்டு இருந்தவற்றுடன் இயேசு போதித்தவற்றை நேர்மாறாக்குகின்றன. இவ்வசனப்பகுதி, "அன்றியும், பொய்யாணையிடாமல் ... என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்று தொடங்குகிறது (வசனம் 33அ).* KJV *வேதாகமத்தில்,* "Thou shalt not forswear thyself" *என்றுள்ளது.* "Forswear" *என்பது பொய்ச் சத்தியத்திற்கு ஒப்புக்கொடுத்தலைக் குறித்தது. அவர்கள் கேள்விப்பட்டிருந்தவற்றை இயேசு தொடர்ந்து கூறினார்: "உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக" (வசனம் 33ஆ).* KJV *வேதாகமத்தில்* "but shalt perform unto the Lord thine oaths" *என்றுள்ளது.*

*இயேசு குறிப்பிட்ட போதனை, பழைய ஏற்பாட்டில் உள்ள வார்த்தைக்குச் சரியான வார்த்தை மேற்கோளாக இருக்கவில்லை, ஆனால் அது பழைய ஏற்பாட்டின் பல வேதவசனப் பகுதிகளின் தொகுப்புரையாக இருந்தது. அவற்றில் இரு மாதிரிகள் கீழே தரப்படுகின்றன:*

> *ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன் (எண்ணாகமம் 30:2).*
>
> *நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ்செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும் (உபாகமம் 23:21; காண்க வசனங்கள் 22, 23).*

*ஒரு ஆணையை நிறைவேற்றும் அறிவுறுத்துதல்கள், பத்துக் கற்பனைகளில் மூன்றாவது கற்பனைக்கு நெருங்கிய தொடர்பு உடையவையாக இருந்தன: "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:7அ). லேவியராகமத்தில் தேவன், "என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்" என்று அறிவித்தார் (19:12). ஒன்பதாவது கற்பனையின் தொடக்க வார்த்தைகளிலும் இதன் பிரதிபலிப்பு ஒன்று இருக்கலாம்: "... பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:16).*

*எண்ணாகமம் 30:2ம் வசனம் ஒரு "பொருத்தனை" மற்றும் "ஆணை" ஆகிய இரண்டையும் குறிப்பிடுகிறது என்பதைக் கவனியுங்கள். ஒரு பொருத்தனை என்பது "குறிப்பிட்ட ஒரு செயலுக்கு ஒருவரைக் கட்டுப்படுத்துகிற உண்மையான வாக்குறுதி" என்றும், அதே வேளையில் ஆணை என்பது ஒருவர், தாம் கூறுவது*

உண்மையாக உள்ளது[1] என்பதற்குத் தேவனைச் "சாட்சியாக"[2] அழைக்கிறார் என்றும் நாம் பொதுவாக நினைக்கிறோம். இருப்பினும் "பொருத்தனைகள் மற்றும் ஆணைகள் ஆகியவற்றிற்கு இடையிலான வரையறைகள் பொதுவாகத் தெளிவாய்க் காத்துக்கொள்ளப் படவில்லை."[3] NASB வேதாகமத்தில் "பொருத்தனைகள்" என்பதற்கான vows என்ற ஆங்கில வார்த்தை, மத்தேயு 5:33ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளையில், "ஆணை" என்பதற்கான "oath" என்ற ஆங்கிலவார்த்தை 34ம் வசனம் முதல் 36ம் வசனம் வரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[4] இந்தப் பாடத்தில் நாம் இந்தச் சொற்றொடர்களை ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்துவோம். "மோசேயின் நியாயப்பிரமாணம் பயபக்தியற்ற ஆணைகளை, கர்த்தருடைய நாமத்தை இலேசாகப் பயன்படுத்துதலை [மற்றும்] முறிக்கப்பட்ட பொருத்தனைகளைத் தடைசெய்தது."[5]

### இயேசு கூறியது என்ன

பொருத்தனைகளை ஏற்படுத்துதல் பற்றிய பழைய ஏற்பாட்டின் போதனையைத் தொகுத்துரைத்த பின்பு, இயேசு பின்வருமாறு கூறினார்:

> *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; வானத்தின் பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும்[6] சத்தியம் பண்ணவேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே (மத்தேயு 5:34-36).*

இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு நீங்கள், முதல் நூற்றாண்டில் யூதர்களின் நடைமுறை பற்றி அறிந்திருத்தல் அவசியமாக உள்ளது. யூதப் போதகர்கள், எந்தப் பொருத்தனைகள் கட்டுப்படுத்தின மற்றும் எந்தப் பொருத்தனைகள் கட்டுப்படுத்தாது இருந்தன என்பதைப் பற்றி விரிவான முறைமை ஒன்றை மேம்படுத்தி இருந்தனர். மத்தேயு 23ல் வேதபாரகர் மற்றும் பரிசேயரைக் கடுமையாகக் கண்டனம் பண்ணியதில் இயேசு, இவ்வகையான நியாயப்படுத்துதலைக் குறிப்பிட்டார்:

> *குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில் சத்தியம்பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ? மேலும், எவனாகிலும் பலிபீடத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின்மேல் இருக்கிற காணிக்கையின்பேரில் சத்தியம்பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ? ஆகையால் பலிபீடத்தின்பேரில் சத்தியம்பண்ணுகிறவன் அதின்பேரிலும்*

*அதின்மேலுள்ள எல்லாவற்றின் பேரிலும் சத்தியம்பண்ணுகிறான். தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான். வானத்தின்பேரில் சத்தியம்பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின்பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான் (வசனங்கள் 16-22).*

தேவனுடைய நாமம் நாடிக்கூவப்பட்டதா இல்லையா என்பதே பொருத்தனைகளைக் குறித்து ஏற்படுத்தப்பட்ட திறவுகோல் வித்தியாசமாக இருந்தது. தேவனுடைய நாமம் பயன்படுத்தப்பட்டால், ஒரு பொருத்தனை கட்டுப்படுத்தியது என்று யூதத்துவ ரபீக்கள் போதித்தனர்; ஆனால் அவரது நாமம் பயன்படுத்தப்படாதிருந்தால், அந்தப் பொருத்தனை கட்டுப்படுத்துவதாக இருக்கவில்லை. இதன் விளைவாக அவர்கள், பரலோகம், பூமி, எருசலேம் நகரம் மற்றும் தங்கள் தலையின்மீது கூட (அதாவது தங்கள் உயிரின்மீதும்கூட[7]) சத்தியம் பண்ணத் தயங்கவில்லை. அவ்வகையான பொருத்தனையைக் காக்க ஒருவர் கடமைப்பட்டு இருப்பதில்லை என்று அவர்கள் கூறினர். எனது குழந்தைப் பருவத்தில் நடந்த சில விஷயங்கள் என் நினைவிற்கு வருகின்றன. எனது மனதில் நான், இரு பிள்ளைகளுக்கு இடையில் நடைபெற்ற பின்வரும் உரையாடலைக் கேட்க முடிகிறது:

"நீ இதைச் செய்வதாகக் கூறினாயே!"
"ஆனால் எனது விரல்கள் பிணைக்கப்பட்டிருந்தன."
"எந்த விரல்களும் பிணைக்கப்பட்டிருக்க நான் காணவில்லையே."
"நல்லது, நான் அவற்றை என் முதுகுக்குப் பின்னால் வைத்திருந்தேன்."

ஒருவன் தனது சுட்டு விரலையும் நடுவிரலையும் குருக்காக வைத்துக் கொண்டிருந்தால், அவன் தான் விரும்பிய எதையும் கூறமுடியும் மற்றும் அவ்வாறு கூறப்படும் வார்த்தைகளுக்கு அவன் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை என்பது பிள்ளைகளிடையே இருந்த பொதுவான நம்பிக்கையாகும்.[8] இந்தக் கருத்து மதியீனமானதாக ஒலிக்கிறது - ஆனால் இது, தேவனுடைய நாமம் பயன்படுத்தப்படாத வகையிலான பொருத்தனை, கட்டுப்படுத்துவது இல்லை என்ற யூதர்களின் கூற்றைக் காட்டிலும் அதிக மதியீனமானதாக இருப்பதில்லை.

சிலர் தங்கள் தலைகளைக் குலுக்கி, "மக்கள் இவ்வளவு மதியீனமாக இருப்பது எப்படி? நாம் இனியும் இவ்வகையான மதியற்ற தனிக்குறிப்புகளை ஏற்படுத்துவதில்லையே" என்று நினைக்கலாம். நாம் இவ்வாறு செய்வதில்லை என்று நீங்கள் உறுதியாகக் கூறமுடியுமா? உண்மையைக் கூறுதல் குறித்து பலர், வாழ்வின் பல்வேறு வட்டாரங்களில் பல்வேறு சட்டங்கள் இருப்பதாக நம்புகின்றனர். அவர்கள், உண்மையாக இருப்பதில் தாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர், இருப்பினும் அவர்கள் - வியாபாரத்தில், அரசியலில் அல்லது மற்ற நாடுகளுடனான விஷயங்களில் - பொய்கூறுதல் சரியானதாக உள்ள சூழ்நிலைகள் இருப்பதாக நினைக்கின்றனர்.

இயேசுவின் நாட்களில் யூதர்கள் ஏற்படுத்திய வித்தியாசப்படுத்துதல் குறித்து அவர், அவர்கள் ஆணையிட்டவற்றில் எதுவும் தேவனை விட்டுப் பிரிக்கப்படக் கூடாதிருந்தது என்று கூறினார். பரலோகம் அவரது அரியணையாக உள்ளது,

பூமி அவரது பாதப்படியாக உள்ளது (காண்க ஏசாயா 66:1). இயேசுவின் நாட்களில் எருசலேம் அவரது தேவனுடைய விசேஷித்த நகராக இருந்தது,[9] அங்கு தேவாலயம் அமைந்திருந்தது. தலைகூடத் தேவனால் படைக்கப்பட்டதாக இருந்தது மற்றும் "அதன் ஒவ்வொரு முடியும் அவரது கைவேலையின் முத்திரையைச் சுமந்திருக்கிறது."[10]

சிலர் தங்கள் முடிகளை வெளுக்கச் செய்தால் (அதை இலேசான நிறம் உள்ளதாக்குவதால்) அல்லது சாயம் பூசிக்கொள்வதால் (அதை இருண்ட நிறமாக்குதலால்), "அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே" என்று வார்த்தைகள் என்ன என்று சிலர் வியப்படைகின்றனர். பிரிட்டிஷ் வானொலி நிகழ்ச்சி ஒன்றின்படி, முடிக்குச் சாயம் பூசிக்கொள்ளுதல் என்பது "நான்கு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக" இருந்து வரும் பொதுவான நடைமுறையாக உள்ளது.[11] இயேசு, முடியின் *இயற்கையான* நிறத்தைப் பற்றிப் பேசினார். நான் வயது முதிர்ந்தவன் ஆகியுள்ள வேளையிலும் எனது தலையில் உள்ள முடியானது இன்னும் அடர்ந்த நிறமாக உள்ளது, ஆனால் எனது மைத்துனியின் முடியானது அவள் இளம் பெண்ணாக இருந்தபோதே வெளுமையாகி விட்டது. நம்மில் எவரும் இந்தக் கோட்பாட்டின் மீது கட்டுப்பாடு செலுத்த இயலாது. வாழ்வில் - ஒருவர் தலையில் உள்ள மிகச்சிறிய முடி உட்பட - எந்த விஷயமும், எல்லாவற்றையும் படைத்தவரிடத்தில் இருந்து பிரிக்கப்பட இயலாது என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது. ஆகவே தேவனுடைய நாமத்தில் ஏற்படுத்தப்படும் ஒரு ஆணையானது கட்டுப்படுத்துவதாக இருக்கும் வேளையில், தேவனுடைய படைப்பின் பாகத்தில் ஏற்படுத்தப்படும் ஆணையானது கட்டுப்படுத்துவதாக இருப்பதில்லை என்று நினைப்பது மதியீனமான விஷயமாக உள்ளது.

எந்த ஆணைகள் கட்டுப்படுத்தின மற்றும் எந்த ஆணைகள் கட்டுப்படுத்தவில்லை என்று தீர்மானிக்க முயற்சி செய்வதற்குப் பதிலாக, இயேசு "பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்." "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:37அ). "உள்ளது" அல்லது "இல்லது" என்பதை மறுபடியும் கூறுதலானது, நீங்கள் "ஆம்" அல்லது "இல்லை" என்று கூறும்போது, மறுபடியும் கூறுதலினால் வார்த்தைகளை வலியுறுத்துவதை அனுமதிக்கிறது.[12] அனேகமாக, நீங்கள் "உள்ளது" என்று கூறும்போது நீங்கள் "ஆம்" என்று *அர்த்தப்படுத்த வேண்டும்* மற்றும் நீங்கள் "இல்லது" என்று கூறும்போது நீங்கள் "இல்லை" என்பதை *அர்த்தப்படுத்த வேண்டும்* என்பதும் இங்கு அர்த்தமாக இருக்கலாம். ஒரு ஆணையைக் கொண்டு உங்கள் வார்த்தைகளை மறுவலியூட்டுதல் தேவையற்றதாக இருக்க வேண்டும். யாக்கோபு தமது நிருபத்தில் இதைப்போன்ற ஒரு கூற்றை ஏற்படுத்தினார்: "விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின்பேரிலாவது, பூமியின்பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம்பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்" (யாக்கோபு 5:12).

இயேசு, "இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 5:37ஆ). "தீமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (poneros என்ற) வார்த்தை "பொல்லாங்கனை" (அதாவது, பிசாசை) அல்லது (பொல்லாங்கான இருதயம் போன்ற) "பொல்லாங்கான விஷயத்தை" அர்த்தப்படுத்தக் கூடும்.

*இதே போன்ற தெளிவற்ற தன்மையை நாம், மலைப்பிரசங்கத்தில் இன்னும் இருமுறை எதிர்கொள்ளுவோம் (5:39; 6:13), ஆனால் நமது தற்போதய வசனப் பகுதியில் நாம் குறிப்பிடும் அர்த்தம் சிறிதே வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. எவ்வகையிலும், அற்பமான ஆணைகளின் ஆதாரமூலம் தீமையாகவே உள்ளது. மேலும், மதியீனம் நிறைந்துள்ள பொல்லாத உலகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதே ஆணையிடுதல்கள் அவசியமாக உள்ளன என்பதற்கு ஒரே காரணமாகும் என்பது மறைகருத்தாக இருக்கலாம்.*

## போதனை

**இயேசு எதைப் போதித்துக் கொண்டிருக்கவில்லை**

*வேதபாட வசனப் பகுதியை நாம் பரிசீலனை செய்துள்ள நிலையில் இப்போது, "இயேசு கூறியவற்றினால் அவர் அர்த்தப்படுத்தியது என்ன?" என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. முதலில் நாம், இயேசு எதைப் போதிக்கவில்லை என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.*

*இயேசுவின் வார்த்தைகள், ஒருக்காலும், எந்த சூழ்நிலையின் கீழும், ஒரு கிறிஸ்தவர் ஒரு பொருத்தனையை ஏற்படுத்தவோ அல்லது ஆணையிட்டு எதையும் கூறவோ கூடாது என்று அர்த்தப்படுத்துவதாகச் சிலர் எடுத்துக் கொண்டுள்ளனர். சில மதப் பிரிவுகளில் இது, விசுவாசத்தின் ஒரு பிரிவாக உள்ளது மற்றும் இது சில கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் தனிப்பட்ட மனச்சான்றிற்குரிய விஷயமாக உள்ளது. நீதிமன்றத்தில் ஆணையிட்டுக் கூறுதல் என்பது சிறப்பான அக்கறைக்குரிய பகுதியாக உள்ளது. மத்தேயு 5:33-37 வசனப் பகுதியை அதில் மாத்திரம் எடுத்துக் கொள்வதாக இருந்தால், தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் நீதிமன்றத்தில் ஆணையிடக் கூடாது என்று அது போதிப்பதாகவே காணப்படுகிறது என்பது உறுதி. இயேசு அதையே போதித்தார் என்று அது போதிப்பதாகவே காணப்படுகிறது என்பது உறுதி. இயேசு அதையே போதித்தார் என்று நீங்கள் நம்பினால், உங்கள் செயல்கள் உங்கள் நம்பிக்கையான உறுதிப்பாடுகளுடன் சீர்பொருத்தமாக இருக்கட்டும்; உங்கள் மனச்சாட்சியை நீங்கள் மீறாதிருங்கள்.[13] மற்ற நாடுகளைப் பற்றி நான் அறிவதில்லை, ஆனால் அமெரிக்க நீதிமன்றங்களில், சாட்சியளிப்பதற்கு முன்னர் வழக்கமான ஆணையிடுதலை மனச்சாட்சியுடன் மேற்கொள்ள இயலாதவர்களுக்கு விலக்களிப்பு ஒன்றை ஏற்படுத்துகிறது. அவர்கள் உண்மையையே பேசுவார்கள் என்பதை "பொய்ச்சாட்சி கூறுதலுக்கான தண்டனையின் கீழ் உறுதிப்படுத்தும்'' கூற்று ஒன்றைக் கூற அனுமதிக்கப்படுகின்றனர்.[14]*

*இருப்பினும், இயேசு அதைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை என்று நான் கருத்துத் தெரிவிக்கிறேன். J. W. மெக்கார்வீ அவர்கள், "அதிகாரத்துவமான உதாரணங்களின் வெளிச்சத்தில் தடைகளை நாம் விளக்கப்படுத்தும்போது'' இந்த முடிவை அடையவேண்டும் என்று எழுதினார்.[15] "அதிகாரத்துவமான உதாரணங்கள்'' என்பவை யாவை? தேவனுடைய உதாரணத்தைக் கொண்டே நாம் இதைத் தொடங்கலாம். தேவன் ஒரு ஆணையைக் கொண்டு வாக்குத்தத்தம் செய்ததைப்பற்றி, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இருமுறை பேசினார்:*

> *ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு: நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார் (எபிரெயர் 6:13, 14).*

> *... அவர்கள் (லேவிகோத்திரத்து ஆசாரியத்துவத்தினர்) ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார் (எபிரெயர் 7:21).*

*பின்பு இயேசுவின் உதாரணம் உள்ளது. அவர் சனதெரீன் சங்கத்திற்கு முன்பாக விசாரணையில் இருந்தபோது, அவரிடத்தில் பிரதான ஆசாரியர், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று கூறினார் (மத்தேயு 26:63). "ஆணையிட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (exorkizo என்ற) வார்த்தை, "ஒரு ஆணையினால் வேண்டுகோள் விடுத்தல்" என்று அர்த்தப்படுகிறது.*[16] NIV *வேதாகமத்தில், ஆணையின்கீழ் "நான் உன்னை விசாரிக்கிறேன்" என்றுள்ளது. ஆணையின் பயபக்தியைக் கவனியுங்கள்: "அது ஜீவனுள்ள தேவன் பேரில்" இருக்கிறது. ஆணையின்கீழ் இடப்படுதலை இயேசு விசுவாசிக்காமல் இருந்திருந்தால், அவர் மௌனமாகவே இருந்திருக்கக் கூடும் - ஆனால் அவர் அவ்வாறு மௌனமாயிருக்கவில்லை. அவர், "நீர் சொன்னபடிதான்" என்று பதில் அளித்தார் (வசனம் 64), அது உறுதிப்பாடான வழியில் பதிலளிப்பதாக இருக்கிறது.* NIV *வேதாகமத்தில் "ஆம், அது நீர்சொன்னபடியே ஆகும்" என்றுள்ளது.*

*தாம் கூறியதைப் பற்றிய உண்மைத் தன்மைக்கு அடிக்கடி தேவனைச் சாட்சியாக அழைத்த பவுலின் உதாரணத்தையும் நாம் கொண்டுள்ளோம். எடுத்துக்காட்டாக, பிலிப்பியர் 1:8ல் அவர், "இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி" என்று கூறினார் (மேலும் ரோமர் 1:9; கலாத்தியர் 1:20; 2 கொரிந்தியர் 1:23 ஆகிய வசனங்களையும் காணவும்). இந்த உதாரணங்களில் இருந்து நாம், ஒரு ஆணையிடுதல் அல்லது சத்தியம் செய்தல் தேவைப்படுகிற பரிசுத்தமான தருணங்கள் உள்ளன என்று முடிவு செய்கிறோம்.*

### இயேசு எதைப் போதித்துக் கொண்டிருந்தார்

*ஆணைகள் மற்றும் சத்தியங்களை முற்றிலுமாகத் தடைசெய்தல் என்பது நமது வேத வசனப் பகுதியின் நோக்கமாக இருக்கவில்லை என்றால், அதன் குறிக்கோள் என்னவாக இருந்தது? இயேசுவின் வார்த்தைகளில் இருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்? மத்தேயு 5:33-37ல் இருந்து பல கொள்கைகளை உய்த்துணர முடியும்.*[17] *மூன்று கொள்கைகளை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.*

*(1) அற்பமான ஆணைகளைத் தவிர்த்து விடுங்கள்.* நமது வேதவசனப் பகுதியானது, நாம் அற்பமான[18] ஆணைகளைத் தவிர்க்க வேண்டும் என்று போதிக்கிறது - இவைகள் பின்வரும் உதாரணங்களில் இருப்பது போன்று, தேவனுடைய நாமத்தையும் தேவனுடன் தொடர்புடைய விஷயங்களையும் சாதாரணமாகப் பயன்படுத்தும் கூற்றுகளாக உள்ளன:[19]

- "தேவனால். ..." ["கடவுள் அறிய"].
- "பரலோகத்தி[ங்களி]ல். ..."
- "பரிசுத்தமான எல்லாவற்றினாலும். ..."

அற்பமான சத்தியங்கள் தவறானவைகளாக மாத்திரமல்ல, ஆனால் அவைகள் பயனற்றவையாகவும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தாத நிலையில் ஒரு தனிநபரை நீங்கள் நம்ப இயலாது என்றால், இவற்றை அவர் பயன்படுத்தும்போதும் நீங்கள் அவரை நம்ப இயலாது. யாரோ ஒருவர், "நேர்மையான ஒரு மனிதர், ஆணையின்றியே நம்பப்படுகிறார், ஆனால் நேர்மையற்ற ஒரு மனிதர், ஆயிரக்கணக்கான சத்தியங்களைப் பயன்படுத்தினாலும் நம்பப்படுவதில்லை" என்று கூறியுள்ளார்.

தேவனுடைய நாமத்தையும் பரிசுத்தமான மற்றவற்றையும் தேவதூஷணமாகப் பயன்படுத்துதல் என்பதோடு, அற்பமான ஆணைகள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. உலகில் நான் வாழும் பகுதியில், பின்வருபவை போன்ற சொல்விளக்கங்கள் சாதாரணமானவையாக உள்ளன:

- மன எழுச்சி கொண்ட ஒருவர், "ஓ என் கடவுளே!" என்று கூறுகிறார்.
- மற்றவரைக் குறித்து எரிச்சல் கொள்ளும் ஒருவர், "தேவனுடைய நாமத்திலே நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கூறுகிறார்.
- கவலைப்படுகிற ஒருவர், "நான் அதை எவ்வாறு கடந்து வருகிறேன் என்பதைத் தேவன் மாத்திரமே அறிவார்" [அல்லது "பரலோகத்திற்கு மாத்திரமே தெரியும்"] என்று கூறுகிறார்.[20]

இயேசுவின் நாமத்தை ஒரு ஆச்சரியக் குறியாகப் பயன்படுத்துதல் போன்ற மற்ற உதாரணங்கள் குறிப்பிடப்பட முடியும்.[21] தெய்வ நிந்தனையுடன் ஆணையிடுபவரால் உறுதிப்படுத்தப்பட்டதைக் காட்டிலும் அதிக பயங்கரமான குற்றம் எதுவும் இருப்பதில்லை என்று ஆல்பர்ட் பேர்னஸ் அவர்கள் கூறினார்,

> ... தேவனுடைய சகிப்புத்தன்மையைப் பற்றித் திகைப்படைவதற்கு, அவர் பழிவாங்குதலில் எழுந்திருந்து தெய்வநிந்தனையுடன் ஆணையிடுபவரை உடனே நரகத்தில் தள்ளுவதில்லை என்பதைக் காட்டிலும் அதிக காரணம் இந்த அண்டத்தில் இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் அவரது நாமம் நிந்திக்கப்படும் இதைப்போன்ற உலகத்தில், மற்றும் நேரத்தில், மற்றும் ஆயிரக்கணக்கானவர்களால் இவை போன்றவை கூறப்படும் தருணங்களில், தேவன் கோபிக்கத் தாமதமாக இருப்பதையும் அவரது இரக்கம் எல்லைகள் இன்றி இருப்பதையும் காண்பிக்கிறார்![22]

*(2) உண்மை நிறைந்த நபராக இருங்கள்.* சற்று நேரத்திற்கு முன், நேர்மையான நபருக்கு ஆணையிடுதல்கள் தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தேன். நம்மில் ஒவ்வொருவரும் நேர்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும், நம்பப்படுவதற்கு ஒரு ஆணையைப் பயன்படுத்துதல் தேவையற்ற வகையிலான தனிநபராக இருக்க வேண்டும் என்பது நமது வேதபாட வசனப் பகுதியில் இருந்து வருகிற இரண்டாவது பாடமாக உள்ளது.

ஒரு சிறுபையன் தனது இளைய சகோதரனுக்கு, தனது பெற்றோர்களின் பதில்களை எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டும் என்று விளக்கப்படுத்திக் கொண்டிருந்தான். அவன், "அவர்கள் 'ஆம்' என்று சொல்வார்கள் என்றால், அது 'ஒருவேளை' என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் 'இதைப்பற்றி நான் சிந்திப்பேன்' என்று சொல்வார்கள் என்றால், அது 'இல்லை' என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் 'இல்லை' என்று சொல்வார்கள் என்றால் அது நீ விரும்புவதைப் பெறும் வரையில் இருமுறை அவர்களுக்கு ஓயாது தொல்லை தர வேண்டும் என்று அர்த்தப்படுகிறது" என்று கூறினான். அந்தப் பையனின் மதிப்பீடு தவறானதாக இருந்தது என்று நான் நம்புகிறேன். அது மிகச்சரியானதாக இருந்தது என்றால், அவனது பெற்றோர் நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள பின்வரும் பாடத்தைக் கற்றிருக்க வில்லை என்றாகிறது: "நீங்கள் எதை அர்த்தப்படுத்துகிறீர்களோ அதையே கூறுங்கள் மற்றும் நீங்கள் எதைக் கூறுகிறீர்களோ அதையே அர்த்தப்படுத்துங்கள்."

நீங்களும் நானும் அந்தச் சிறுபையனின் பெற்றோர்களைப் போல் இருக்கலாகாது.[23] நாம் "உள்ளது" என்று கூறுகிறபோது, நாம் "ஆம்" என்று அர்த்தப்படுத்துவது அவசியமாக உள்ளது. நாம் "இல்லது" என்று கூறும்போது, நாம் "இல்லை" என்று அர்த்தப்படுத்துவது அவசியமாக உள்ளது. "பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25).

நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, நாங்கள் "அவர் தமது வார்த்தையின்படி செய்கிற மனிதராக இருக்கிறார்" மற்றும் "அவரது வார்த்தை அவரது கட்டாக உள்ளது" என்பவை போன்ற சொல்விளக்கங்களைக் கொண்டிருந்தோம், இவை ஒரு நபர் உண்மையைக் கூறுகிறார் என்று அர்த்தப்படுத்துகின்றன. பெரும்பான்மையான பேரங்கள் கைகளைக் குலுக்குவதால் முத்திரையிடப்பட்டன. இன்றைய நாட்களில் நாம், வேறுபட்ட ஒரு உலகத்தில் வசிக்கிறோம், இது வழக்கறிஞர்கள் மாத்திரமே புரிந்துகொள்ளக் கூடிய, சட்டப்பூர்வமான உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களில் மூழ்கியுள்ளது. மக்கள் அதிகம் நேர்மையற்றவர்களாகவும் பாவ இயல்பு உடையவர்களாகவும் ஆகுகையில், சூழ்நிலை மிகவும் மோசமாகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் என் முதல் இல்லத்தை வாங்கின போது, தேவைப்பட்ட பத்திரப்பதிவுகள் ஒரு சில பக்கங்களைக் கொண்டிருந்தன. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நான் எனது தற்போதைய இல்லத்தை வாங்கியபோது, தேவைப்பட்ட பத்திரப்பதிவுகளின் கனமானது ஏறக்குறைய ஒரு அங்குலமாக இருந்தது.

நீங்களும் நானும், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருக்கிறோம் (ரோமர் 13:1), எனவே நமது பரிவர்த்தனைகளின் சட்டப்பூர்வமான தேவைகளில் இருந்து தப்பிக்க இயலாது. இருந்தபோதிலும்,

தனிப்பட்ட வகையில் நம்மில் ஒவ்வொருவரும் நேர்மையாக இருக்கக் கடும் முயற்சி செய்ய வேண்டும் மற்றும் உண்மை பேசுபவர் என்ற நற்பெயரை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.[24]

*(3) உங்கள் வார்த்தையை எப்போதுமே காப்பாற்றுங்கள்.* முந்திய பாடத்துடன் மிகவும் நெருக்கமானதாகப் பின்வரும் பாடம் உள்ளது: உங்கள் வார்த்தையை எப்போதுமே காப்பாற்றுங்கள். இது ஒருவேளை எனது கற்பனையாக இருக்கலாம், ஆனால் அதிகம் அதிகமாக மக்கள், தாங்கள் செய்வதாகக் கூறுவதைச் செய்யத் தவறுபவர்களாக உள்ளனர். வளர்ந்த எண்ணிக்கையிலானவர்கள், ஏதேனும் ஒன்றைப் பெற விரும்புபவர்களிடம் அதைத் தருவதாக வாக்களித்தல் என்பது அவர்களை விரட்டுவதற்கான மிகவிரைவான வழியாக உள்ளது என்று முடிவு செய்துள்ளனர் என்பது உறுதி. அவர்கள், "நிச்சயமாக நான் அதைக் குறித்துக் கவனம் எடுப்பேன்" என்று கூறுகின்றனர் - மற்றும் அதுவே அடிக்கடி அவர்களிடம் இருந்து கேள்விப்பட்ட கடைசி விஷயமாக இருக்கிறது. அவர்கள் வாக்குறுதிகள் ஏற்படுத்துவதை அற்பமானதாக நினைத்து அவற்றைக் காத்துக்கொள்ளும் நோக்கம் எதுவும் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்விடத்தில் நான், திருமணச் சடங்குகளின்போது ஏற்படுத்தப்படும் வாக்குறுதிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூறியாக வேண்டும்.[25] திருமணம் பற்றிய இதற்கு முந்திய வசனப்பகுதிக்கும் (மத்தேயு 5:31, 32) இப்போது ஆராய்ச்சி செய்யப்படும் "உள்ளது/இல்லது" வசனப்பகுதிக்கும் இடையில் "ஒரு இயல்பான இணைவு உள்ளது" என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[26] திருமணச் சடங்குகளின் போது ஏற்படுத்தப்படும் பரிசுத்தமான வாக்குறுதிகள் மாறுபடுகின்றன; ஆனால் அவற்றில் அடிக்கடி, "உடல் நலத்திலும் நோயிலும்," "மற்ற எல்லாரையும் விட்டுவிட்டு" மற்றும் "நாம் இருவரும் உயிரோடு இருக்கும் வரையிலும்" என்பவை போன்ற வார்த்தைகள் உள்ளடங்குகின்றன. இந்த வாக்குறுதிகளை ஏற்படுத்துகின்றவர்கள் தங்களின் வார்த்தைகளைப் புரிந்து கொள்கின்றனரா? அவர்கள் "நான் அதைச் செய்கிறேன்" என்று கூறுகிறபோது, அவர்கள் "அவர் அல்லது அவள் என்னைச் சந்தோஷப்படுத்துகிற வரையில் நான் அதைச் செய்கிறேன்" என்று அர்த்தப்படுத்துகின்றனரா? அவர்களின் "ஆம்" என்பது "ஆம்" என்று அர்த்தப்படுகிறதா அல்லது அது "ஒருவேளை" என்று அர்த்தப்படுகிறதா?

பல ஆண்டுகளுக்கு முன்பு நான், பல இளம் தம்பதிகள் - நான் திருமணச் சடங்கை நிகழ்த்தி இருந்த பல தம்பதிகள் - விவாகரத்துப் பெற்றதைக் குறித்து ஊக்கம் இழந்தவன் ஆனேன். அந்த எண்ணிக்கையைக் குறைக்கும் என்று நான் நம்பிய ஒரு விரிவான திட்டநிகழ்வை நான் தயாரித்தேன். திருமணச் சடங்கிற்கு முன்னர், விரிவான ஆற்றுப்படுத்துதல் மற்றும் சோதித்தல் ஆகியவை எனக்கு தேவையாயிருந்தன. நான் திருமணம் செய்விக்கும் தம்பதியர் தங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டால், விவாகரத்திற்காக வழக்கறிஞர்களை அணுகுவதற்கு முன்னர் என்னை அணுக வேண்டும் என்று கூறுகிற ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் அவர்கள் இருவரும் கையொப்பம் இடவேண்டும் என்பது விசேஷித்த கேட்பாக இருந்தது. எனது முன்னெச்சரிக்கைகள் வீணானவையாகக் காணப்பட்டது என்பது எனக்குத் திகைப்பை ஏற்படுத்தியது. நான் ஆற்றுப்படுத்தி இருந்தவர்களில் பலர் அப்பொழுதும் விவாகரத்தைப் பெற்றனர். இதை என்னால் புரிந்துகொள்ள

இயலவில்லை. எனது மனைவியிடத்தில் நான், "ஆனால் அவர்கள் ஒரு விவாகரத்து வழக்கறிஞர்களைத் தொடர்பு கொள்வதற்கு முன்னர் என்னைத் தொடர்பு கொள்வதாக *வாக்களித்து இருந்தனர்!* மற்றும் அவர்கள் அதைச் செய்யவில்லையே!" என்று கூறுவது உண்டு. நிறைவாக, அவர்கள் தேவனுக்கு முன்பாகத் தாங்கள் செய்திருந்த பரிசுத்த உடன்படிக்கையை மீறுவதைப் பற்றிக் கவலைப்படாதிருந்தால், அவர்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை மீறத் தயங்க மாட்டார்களே என்ற சிந்தனை எனக்கு வந்தது.

எனது முழு பலத்துடன் நான் உங்களைப் பின்வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ள என்னை அனுமதியுங்கள்: உங்கள் வார்த்தையைக் காப்பாற்றும் நபராக இருங்கள். சிலவற்றை நீங்கள் செய்வதாக *கூறும்போது*, அதைச் *செய்வதில்* உறுதியாயிருங்கள். நீங்கள், "ஆனால் வாக்குறுதியைக் காப்பாற்றுதல் *கடினமாக* இருந்தால் என்ன செய்வது? அதைக் காத்துக்கொள்ளச் சிலவற்றை *விலைகொடுக்க வேண்டியிருந்தால்* என்ன செய்வது?" என்று கேட்கலாம். நீங்கள் ஒரு விஷயத்தைச் செய்வதாகக் *கூறும்போது* அதைச் செய்யுங்கள் - சிலவற்றை விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தாலும் அதைச் செய்யுங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான், தேவபக்தியுள்ள ஒரு கிறிஸ்த மனிதரின் சவ அடக்கத்திற்குப் பயன்படுத்த நல்ல வசனப் பகுதியொன்றைக் கண்டுபிடித்தேன்: சங்கீதம் 15.[27] தேவபக்தியுள்ள ஒரு நபரைப் பற்றித் தாவீது சித்தரிக்கையில், அவர் 4ம் வசனத்தில் உள்ள பின்வரும் பண்பை உள்ளடக்கினார்: "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்." அது, தேவபயமுள்ள ஒரு மனிதர், ஏதேனும் ஒன்றைச் செய்வதாக வாக்களிக்கும்போது, அவர் அதைச் செய்கிறார் - அதைச் செய்வது அவரைப் புண்படுத்தினாலும் அவர் அதைச் செய்கிறார். NIV வேதாகமத்தில், அவர் "தமது ஆணை தம்மைப் புண்படுத்துகிறபோதும் அதை அவர் காப்பாற்றுகிறார்" என்றுள்ளது. பொழிப்புரை ஒன்று பின்வரும் புத்திமதியைக் கொண்டுள்ளது: "உங்கள் வார்த்தைக்கு விலைகொடுக்க வேண்டியிருக்கும் போதும் அதைக் காப்பாற்றுங்கள்."[28] லேரி கேல்வின் அவர்கள் இந்த முக்கியமான கொள்கைக்குப் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> நான் ஏழு வயதுடையவனாக இருந்தபோது எனது தாத்தாவிடம், மாடல் T என்ற கார் இருந்தது, அவர் அதை விற்க முயற்சி செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் காலையில் ஒரு மனிதர் வந்து, அந்தப்பழைய காருக்கு ஆயிரம் டாலர்கள் கொடுப்பதாக எனது தாத்தாவிடம் கூறினார். எனது தாத்தா அது குறித்து அந்த மனிதரின் கையைப் பற்றிக் குலுக்கினார், இருவரும் அந்த விற்பனையை ஒப்பந்தம் செய்தமைக்கு இந்தக் கைகுலுக்கல் அடையாளமாக இருந்தது. அந்த மனிதர் உடனே பணம் கொடுக்க இயலாது இருந்தது. அவர் "உங்களுக்குச் சம்மதம் என்றால் நான் சற்றுப் பின்பு வந்து பணம் கொடுத்து இந்தக் காரை எடுத்துச் செல்கிறேன்" என்றார். உடனே தாத்தா, "நல்லது, அப்படியே செய்யலாம்" என்று கூறிவிட்டார்.
>
> பிற்பாடு மதிய நேரத்தில் வேறொரு மனிதர் வந்து எனது தாத்தாவிடம் அந்தக் காருக்கு இரண்டாயிரத்து ஐநூறு டாலர்கள் தருவதாகக் கூறினார். அப்போது நடந்த விஷயத்தை நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன். எனது தாத்தா வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு அந்த மனிதரிடத்தில், "நீங்கள் இன்று காலையே இங்கு வந்திருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

*அந்த இரண்டாயிரத்து ஐந்நூறு டாலர்களை நான் நிச்சயமாகவே பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் இன்று காலையில் வேறொரு நபருடன் நான் இதை விற்பதாகக் கைகுலுக்கி விட்டேன். இதை நான் ஆயிரம் டாலர்களுக்கு விற்றுவிட்டேன்" என்று கூறினார்.*[29]

ஆம், ஒரு வாக்குறுதியைக் காப்பாற்றுவது சாத்தியமற்றதாக இருக்கிற சந்தர்ப்பங்கள் வரும் என்று நான் அறிந்திருக்கிறேன். பிரசங்கிக்கும் பணி ஒன்றிற்கு நான் வாக்குறுதி அளித்துவிட்டு, பின்னர் நான் உடல் சுகவீனமானதால் அந்தப் பணியை நிறைவேற்ற இயலாது போனேன். பெற்றோர் என்ற வகையில் நான், சிந்திக்காமலேயே சில வாக்குறுதிகளை அளித்துவிட்டு, நான் செய்வேன் என்று கூறியதைச் செய்ய இயலாதவனாகி இருந்தேன். (அந்த சந்தர்ப்பங்களை மீண்டும் நினைவுபடுத்திப் பார்த்தல் என்பது இன்னமும் மனதைப் புண்படுத்துகிறது.) இருப்பினும் இவை போன்ற நிகழ்ச்சிகள், விதியாக இருப்பதற்குப் பதிலாக விதிவிலக்குகளாக இருக்க வேண்டும். நாம் இதை அல்லது அதை செய்யப் போவதாகக் கூறுவதற்கு *முன்னர்,* அதற்கு நாம் கொடுக்க வேண்டிய விலையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தால், அவைகள் நாம் கூறுபவைகள் ஒரு சிலவாகவும் அரிதாகவும் இருக்கும். மீண்டும் நான் உங்களிடம் பின்வருவதை வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறேன்: ஒருசில வாக்குறுதிகளையை ஏற்படுத்துங்கள், மற்றும் நீங்கள் ஏற்படுத்தும் வாக்குறுதிகளைக் காத்துக் கொள்ளுங்கள்.

## முடிவுரை

"நமது கலாச்சாரத்தில் நாம், நேர்மைக்கான இடர்ப்பாடு ஒன்றைக் கொண்டுள்ளோம்" என்று கூறப்பட்டுள்ளது.[30] தேவனுடைய பிள்ளைகள், அந்த மனப்பாங்கை மாற்றுவதில் நடத்துனர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக உள்ளது. நாம் இந்த பூமிக்கு உப்பாகவும் இந்த உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்றால், நாம் நேர்மையின் மக்களாக இருக்க வேண்டும். கர்த்தரிடம் வருவதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் நாம் உதவ வேண்டும் என்றால், நாம் நேர்மையின் மக்களாக இருக்க வேண்டும். அன்றாட வாழ்வின் விஷயங்கள் பற்றி நாம் பேசும்போது, நாம் கூறுபவற்றை மற்றவர்கள் நம்ப இயலாது என்றால், நித்தியமான விஷயங்களைப் பற்றி நாம் பேசும்போது அவற்றை அவர்கள் ஏன் நம்ப வேண்டும்?

மீண்டும் ஒருமுறை இது, சுய பரிசோதனைக்கான வேளையாக உள்ளது. ஒருவேளை சிலர், இதில் கலந்துரையாடப்பட்ட தலைப்புகள் எல்லாவற்றையும் குறித்து "குற்றம் உள்ளவர்களாக" இருப்பதினால் வேண்டுகோள் விட வேண்டியவர்களாக இருக்கலாம்: அற்பமான ஆணைகளை இடுதல், தேவனுடைய நாமத்தைத் தூஷித்தல், உண்மையைக் கூறத் தவறுதல் மற்றும் தங்களின் வார்த்தைகளைக் காப்பாற்றத் தவறுதல். இவர்கள் தங்கள் வாழ்வில் ஒரு புதிய பழக்கத்தை ஏற்படுத்துதல் தேவையாக உள்ளது. தேவனுடைய உதவியுடன் இவர்கள் தங்கள் எண்ணப்போக்கு மற்றும் செயல் ஆகியவற்றில் முற்றிலுமான மாற்றத்தை ஏற்படுத்துதல் அவசியமாக இருக்கிறது. இருப்பினும் நாம் யாவரும் ஏதேனும் ஒரு அளவில் குற்றமுள்ளவர்களாக இருக்கிறோம் என்பது நிச்சயம். நமது குறைவுகளில் இருந்து நாம் யாவரும் மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பைக் கேட்போமாக, பின்பு எதிர்காலத்தில் சிறப்பானவற்றைச் செய்ய

உதவும்படி தேவனிடம் கேட்போமாக. நாம் நமது வாய்களை "திறக்குமுன் சிந்திப்பதற்கு" நம் யாவருக்கும் தேவன் உதவுவாராக.

---

குறிப்புகள்

[1]ஒரு ஆணை என்பது, ஆணையிடுபவரின் வார்த்தைகள் உண்மையாக இருக்கவில்லை என்றால் அவரைத் தேவன் தண்டிக்கக் கூடும் என்பதையும் மறைமுகமாக உணர்த்துகிறது [2]*The American Heritage Dictinary,* 4th ed. (2001), s.v. "oath." [3]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 124. [4]"பொருத்தனைகள்" மற்றும் "ஆணைகள்" என்பதற்கு நமது வேதபாட வசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள வேறுபட்ட கிரேக்க வார்த்தைகளுக்கு, இந்தப் பாடத்தின் முடிவில் உள்ள "பிரசங்க மற்றும் போதனைக் குறிப்புகளில்" காணவும். [5]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 153. [6]எருசலேம் தவிர மற்ற உதாரணங்களுக்கு முன்னால் "ஆல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *en* என்ற முன்னிடைச் சொல் உள்ளது. "எருசலேம்" என்ற வார்த்தைக்கு முன்னால் "நோக்கி" என்று மொழிபெயர்க்கப்படக்கூடிய *eis* என்ற வார்த்தை உள்ளது. "எருசலேமின் பெயரால்" ஏற்படுத்தப்பட்ட பொருத்தனைகள் கட்டுப்படுத்துபவை அல்ல என்று யூதர்கள் கருதினர், அதே வேளையில் அவர்கள் "எருசலேமை நோக்கி" செய்யப்படும் பொருத்தனைகள் கட்டுப்படுத்தின என்று நினைத்தனர் என்ற உண்மைக்கு இவ்விடத்தில் குறிப்பு இருக்கலாம். [7]அவர்கள் கூறியது உண்மையாக இராவிட்டால், அவர்கள் தங்கள் உயிரைத் துறப்பார்கள் என்பது அர்த்தமாக இருக்கலாம். [8]குறுக்கே வைக்கப்பட்ட விரல்கள் உலகத்தின் பல பகுதிகளில் நல் அதிர்ஷ்டத்தின் குறியாக உள்ளன. இந்த மூடநம்பிக்கை, அறியப்படாத தோற்றுவாயைக் கொண்டதாக உள்ளது. [9]இது இனியும் உண்மையாக இருப்பதில்லை (காண்க யோவான் 4:20, 21), ஆனால் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது இது உண்மையாக இருந்தது. [10]A. Lukyn Williams, "St. Matthew," *The Pulpit Commentary,* vol. 15, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 165.

[11]"The History of Hair Dye" (http://www.bbc.co.uk/radio4/womanshour/05/2006_31_tue.shtml; Internet; accessed 30 May 2008). [12]இயேசு பிரசங்கத்துவ வலியுறுத்தத்திற்காக மாத்திரம் இவ்வார்த்தைகளை மறுபடியும் கூறியிருக்கவும் சாத்தியக் கூறு உள்ளது. [13]இன்றைக்கான சத்தியத்தின் வெளியீடான, டேவிட் ரோப்பர் அவர்கள் எழுதிய, "ரோமருக்கு எழுதிய நிருபம், 5" என்ற புத்தகத்தில் பக்கங்கள் 85-86ல், ரோமர் 14:23ன் மீதான விளக்கவுரைகளைக் காணவும். [14]Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 67. [15]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 57. [16]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 13. [17]இந்தப் பாடத்தைத் தொடர்ந்து வரும் "பிரசங்க மற்றும் போதனைக் குறிப்புகள்" என்ற பகுதியில் மற்ற கருத்துக்களைக் காணவும். [18]இந்த வாக்கியத்தில் "அற்பமான" என்பது "தீவிர கவனத்திற்குத் தகுதியற்ற" என்று அர்த்தப்படுகிறது (*The American Heritage Dictionary,* 4th ed. [2001], s.v. "frivolous"). [19]பிரசங்கத்தின் இந்தப் பகுதியில் நான் தருகிற உதாரணங்கள், நானே சொந்தமாகக் கேள்விப்பட்டு இருப்பவற்றின் அடிப்படையில்

*உள்ளன. உலகின் உங்கள் பகுதியில் உள்ள உதாரணங்களை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்திக் கொள்ளவும்.* [20]*குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தேவன் மீது பயபக்தியுடன் எனது உதாரணங்களில் சிலவற்றைப் பேச முடியும். இருப்பினும், அவைகள் சாதாரணமானவையாகும் விதத்திலேயே அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. அவைகள் தேவனைப் பற்றிய கொஞ்சம் சிந்தனையுடனோ அல்லது தேவனைப் பற்றிய சிந்தனை இல்லாத வகையிலோ தான் பொதுவாகப் பேசப்படுகின்றன.*

[21]"Gosh" *மற்றும்* "Jeez" *என்ற வார்த்தைகளும் குறிப்பிடப்படமுடியும். இந்த அமங்கலச் சொற்கள் அல்லது "சுவையூட்டப்பட்ட ஆணைகள்" என்பவை, பரிசுத்த நாமங்களின் சிறிது வேறுபடுத்தப்பட்ட பதிப்புகளாக* ("Gosh" *என்பது "தேவனையும்"* "Jeez" *என்பது "இயேசுவையும்" குறிக்கிறது) உள்ளது. பெரும்பான்மையான மக்களுக்கு இவைகள் தீமையற்றவைகளாகக் காணப்படுகின்றன, ஆனால் இவற்றைப் பயன்படுத்த மாட்டேன் என்று நீண்ட நாட்களுக்கு முன்பே நான் முடிவு செய்தேன்.* [22]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark*, ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 58. [23]*இல்லம் என்பது நமது பெற்றோர்களின் போதனை மற்றும் உதாரணம் (மற்றும் நாம் உண்மையைக் கூறாதபோது தக்கவைகையிலான தண்டனை) ஆகியவற்றினால் நாம் உண்மையாக இருக்கக் கற்றுக்கொள்கிற இடமாக உள்ளது என்பதைக் குறிப்பிட நீங்கள் விரும்பலாம்.* [24]*உண்மைநிலையில் அடிக்கடி அற்பமானவர்களாகவும் சிந்தனையற்றவர்களாகவும் இருந்து கொண்டு, "எப்போதும் உண்மையையே பேசுகிறேன்" என்று உரிமைகோரும் சிலரைப் பற்றிய வார்த்தை ஒன்றைக் கூடுதலாக இவ்விடத்தில் கூறுவது உங்களுக்கு அவசியமானதாக இருக்கலாம். உண்மையானது அன்புடன் பேசப்பட வேண்டும் (எபேசியர் 4:15).* [25]*இந்த பகுதியானது மேற்கத்திய உலகத்தின் சூழ்நிலையைப் பிரதிபலிக்கிறது. நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், அங்கு ஒருவர் தமது திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதில் மதிப்பு இருக்கும்.* [26]Larry Calvin, *The Power Zone* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 84. [27]*நீதிமொழிகள் 31ன் கடைசிப் பகுதியானது, தேவபக்தி உள்ள ஒரு பெண்மணியைப் பற்றிய தனிச்சிறந்த விவரிப்பாக உள்ளது. சங்கீதம் 15, தேவபக்தியுள்ள ஒரு மனிதரைப் பற்றிய விவரிப்பாக நினைக்கப்படலாம்.* [28]Eugene H. Peterson, *The Message* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 663. [29]Calvin, 89. [30]Ibid., 91.